Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror

FRIDAY, MAY 19, 2023

வெள்ளிக்கிழமை மே 19, 2023 | ஒளி: 08 கதிர் 274 | பக்கம்:06 | வடக்கு,கிழக்கு | FREE

13 மாதங்களின் பின்னர்

## ரூ.300ஐ விட குறைந்தது டொலரின் பெறுமதி



இலங்கை ரூபாய்க்கு நிகரான ஐக்கிய அமெரிக்க டொலரொன்றின் கொள்வனவு விலை கடந்த ஏப்ரல் மாதத்தில் 300 ரூபாயை விட குறைவடைந்திருந்த நிலையில், வியாழக்கிழமை (18) அதன் கொள்வனவு லிலை 299 ரூபாய் 21 சதமாகவும் விற்பனை விலை 312 ரூபாய் 37 சதமாகவும் பதிவாகியது.

தொடர்ச்சி P2



கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

# பதற்றத்திலும் சுடரேற்றம்

கொழும்பு, பொரளையில் வியாழக்கிழமை (18) ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் பதற்ற நிலை ஏற்பட்ட போதும், நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு உணர்வுபூர்வமாக நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி இறுதி யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து, பொரளை, கனத்தை சுற்றுவட்டத்துக்கு அருகில் அருட்தந்தை சக்திவேல் தலைமையில் காலை 10.30 அளவில் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

தொடர்ச்சி P2

## ஜூன் முதல் வருகைதர தேவையில்லை

கடவுச் சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்வரும் ஜூன் மாதம் முதல் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு பிரவேசிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் விண்ணப்பத்தை, இணையத்தளம் ஊடாக அனுப்பிவைக்கலாம் என்றும் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிட்டிய அறிவித்துள்ளார்.

கட்டணத்தை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின், வங்கிக் கணக்கில் வைப்பிலிடலாம் என்றும் பிரதேச செயலகங்களில், கைவிரல் அடையாளங்களைப் பதிவுசெய்ய முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஷானி அபேசேகரவுக்கு போதிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை



குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்ஷானி அபேசேகரவுக்கு போதிய பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வியாழக்கிழமை (18) அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## நந்திக்கடலில் அஞ்சலி



■ சண்முகம் தவசீலன், செ.கீதாஞ்சன்

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு, வடமாகாண சபை முன்னாள் உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சி முல்லைத்தீவு மாவட்ட செயலாளருமான துரைராசா ரவிகரன் தலைமையிலும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தலைமையிலும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

இலங்கை மின்சார சபை

## சீர்திருத்த சட்டம், மாற்று திட்டம் குறித்து பேச்சு



இலங்கை மின்சார சபை சீர்திருத்தச் சட்டம் மற்றும் மாற்றுத் திட்டம் குறித்து கலந்துரையாடுவதற்காக, உலக வங்கியின் எரிசக்தி துறையின் சட்ட நிபுணர், ஜோன் கல்லிவர் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் எரிசக்தி சீர்திருத்த ஆலோசகர் ஹேமந்த் சஹாய் ஆகியோர், அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடன் வியாழக்கிழமை (18) காலை சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.

தொடர்ச்சி P2






## முள்ளிவாய்க்கால் முற்றத்தில் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல்

■ சண்முகம் தவசீலன்

இறுதி யுத்தத்தின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல், முள்ளிவாய்க்கால் முற்றத்தில் வியாழக்கிழமை (18) உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வு, சரியாக காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகியது.

தொடர்ச்சி P2

## அத்தியாவசிய சேவையாக 4 சேவைகள் பிரகடனம்

மின்சாரம், பெற்றோலிய உற்பத்தி, எரிபொருள் விநியோகம், சுகாதாரத் துறை ஆகியவற்றை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதிவிசேட விர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளரது கையொப்பத்துடன், புதன்கிழமை (17) முதல் அமலாகும் வகையில் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.




1979 ஆம் ஆண்டு 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் இரண்டாம் சரத்துக்கு அமைய, ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களின் கீழ் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.



## சமய வழிபாடுகளில் கிழக்கு ஆளுநர்

■ அபு அலா

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட செந்தில் தொண்டமான், வியாழக்கிழமை காலை (18) திருகோணமலையில் உள்ள இந்து, இஸ்லாமிய, பௌத்த, கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்களுக்கு விஜயம் செய்து சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

## ரூ. 16 கோடி பெறுமதியான ஹூக்கா சிக்கியது




டுபாயில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 16 கோடி ரூபாய் பெறுமதியான, ஹூக்கா புகையிலை அடங்கிய கொள்கலன், இலங்கை சுங்கத் திணைக்களத்தின் துறைமுகக் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் வியாழக்கிழமை (18) கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமான கொள்கலன் ஒன்றை பரிசோதித்த போது, கொள்கலன்களுக்குள் நீராவி புகைப்பிடித்தலுக்கு தேவையான ஹூக்கா திரவம் அடங்கிய பொதிகள் காணப்பட்டதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

தலா 50 கிராம் கொண்ட 160,200 சிறிய பக்கெற்றுகள் காணப்பட்டதாகவும் அவற்றின் மொத்த எடை 8,010 கிலோ கிராம் என்றும் 0.05 சதவீத நிகோடின் கொண்ட புகையிலை பொருட்களை இறக்குமதி செய்வது இறக்குமதி விதிமுறைகளின் கீழ் நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென் இலங்கையில் நிறை குறைகிறது



துருக்கியில் மனிதர்களின் நிறை கூடும் அதேசமயம், இலங்கைக்கு பயணிப்பவர்கள் இலகுவாக இருப்பதற்கான காரணத்தை நாசா விஞ்ஞானிகள் சமீபத்தில் கண்டுபிடித்துள்ளனர். பூமியின் மிகக் குறைந்த ஈர்ப்பு விசை, இலங்கையின் தெற்கு முனையிலும் மாலைதீவுக்கு கிழக்கே இந்தியப் பெருங்கடலின் சில பகுதிகளிலும் காணப்படுவதாக ஆய்வொன்றில் நாசா கண்டறிந்துள்ளது.

தொடர்ச்சி P2

## கறுப்பு வான் நாடகமாடிய சிறுவன் கைதானார்

■ கனகராசா சரவணன்

ஏரிஎம் இயந்திரத்தில் எடுத்த பணத்தை தொலைத்துவிட்டு, வான் ஒன்றில் கடத்திவரப்பட்ட நிலையில் வானில் இருந்து தப்பி ஓடிவந்ததாக பொலிஸ் நிலையத்தில் சரணடைந்து நாடகமாடி, பொய் கூறிய சிறுவனை புதன்கிழமை (17) பிற்பகல் கைது செய்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

காவத்தையில் தாய் ஒருவர், 17 வயதுடைய தனது மகனை ஏரிஎம் இயந்திரத்தில் பணத்தை எடுத்துவருமாறு அனுப்பிய நிலையில், பணத்தை தொலைத்துவிட்ட சிறுவன், வீடு செல்ல பயங்காரணமாக அங்கிருந்து மட்டக்களப்புக்கு தப்பி ஓடிவந்து, தன்னை காவத்தையில் இருந்து வான் கடத்தியதாக நாடகமாடியுள்ளார்.

சம்பவதினமான புதன் பிற்பகல் 2 மணியளவில், 17 வயதுடைய சிறுவன் ஒருவன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்து, தான் காவத்தையைச் சேர்ந்தவர் எனவும் திங்கட்கிழமை வங்கியில் ஏரிஎம் இயந்திரத்தில் தாயார் 3 ஆயிரம் ரூபாய் பணம் எடுத்துவருமாறு அனுப்பிய நிலையில், பணத்தை எடுத்துக் கொண்டு வீடு நோக்கி நடந்து சென்ற போது, வான் ஒன்றில் வந்தவர்கள் தன்னை கடத்தி சென்று, முகத்தை துணியால் மூடி கட்டியதுடன் கைகளையும் கட்டி வைத்திருந்தனர் என்று தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வானில் கடத்தி சென்று, வீடு ஒன்றில் கட்டிவைத்த நிலையில் அங்கிருந்து தப்பி ஓட முயற்சித்தபோது, கடத்தல் காரர்கள் தன்னைத் தாக்கி,

தொடர்ச்சி P2

## 3% கட்டண குறைப்புக்கு உடன்படவில்லை



இலங்கை மின்சார சபையால் அறிவிக்கப்பட்டுள்ள மின்சார கட்டணத்தை 3 சதவீதத்தால் குறைப்பதற்கான முன்மொழிவுக்கு தாம் உடன்படவில்லை என்றும் மின்சார கட்டணத்தை 27 சதவீதத்தால் குறைப்பதே தமது விருப்பம் என்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட அரசாங்கக் கொள்கை மற்றும் அமைச்சரவை முடிவுகளுக்கு இணங்க, கட்டண நிரப்புதல் விதிகளுக்கு இணங்க, ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் கட்டணங்களில் இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றங்களை வலியுறுத்தும் வகையில், திங்கட்கிழமை (15) முன்மொழிவு முன்வைக்கப்பட்டதாக மின்சாரசபை தெரிவித்தது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் மின்சார கட்டணத்தை 3 சதவீதம் குறைக்க இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ளதாகவும் ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டார்.

தற்போதைய நிலைவரப்படி, மின்சாரக் கட்டணத்தை உண்மையில் 27 சதவீதம் குறைக்க முடியும் எனவும் தவறான தரவுகளின் அடிப்படையில் அதிகாரிகள் மக்களை தவறாக வழிநடத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## ஜெரோமை கைது செய்து நடவடிக்கை எடுக்கவும்

### உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்

மதங்களை புண்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டதாக கூறப்படும் போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை கைது செய்து சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ரூ.300ஐ விட குறைந்தது டொலரின் பெறுமதி

இலங்கை மத்திய வங்கியால் வியாழன் (18) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் வலுப்பெற்றுள்ளது.

புதன்கிழமையன்று அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 302 ரூபாய் 42 சதமாகவும் விற்பனை விலை 316 ரூபாய் 18 சதமாகவும் பதிவாகியதுடன், செவ்வாய்க்கிழமை (16) கொள்வனவு விலை 305 ரூபாய் 43 சதமாகவும் விற்பனை விலை 318 ரூபாய் 79 சதமாக பதிவாகியது.

கடந்த ஏப்ரல் 6ஆம் திகதியன்று அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 298 ரூபாய் 10 சதமாகவும் விற்பனை விலை 308 ரூபாய் 49 சதமாகவும் பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீர்திருத்த சட்டம், மாற்று திட்டம் குறித்து பேச்சு

அமைச்சர் தனது டுவிட்டர் பக்கத்தில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அடுத்த சில நாள்களில், இலங்கை மின்சார சபை சீர்திருத்தக் குழு உறுப்பினர்கள், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகம் மற்றும் ஜெய்க்கா ஆலோசகர்கள் மற்றும் நிபுணர்கள் ஆகியோர் சீர்திருத்த செயல்முறைக்கு கிடைக்கப்பெற்றுள்ள புதிய சட்டத்தை இறுதி செய்வது குறித்து கலந்துரையாடவுள்ளனர்.

# முள்ளிவாய்க்கால் முற்றத்தில் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல்

உயிர்நீத்த உறவுகளுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, அதனையடுத்து பொதுச்சுடரேற்றப்பட்டது.

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் தனது குடும்பத்தில் 13 பேரை இழந்த மன்னாரைச் சேர்ந்த தாயார் ஒருவர் பொதுச்சுடரினை ஏற்றிவைத்தார்.

அதேவேளை சமநேரத்தில் ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் பிரகடனம் வாசிக்கப்பட்டது. தென்கைலாய ஆதீன முதல்வர் அகத்தியர் அடிகளாரால் முள்ளிவாய்க்கால் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

அத்தோடு இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்ற உறவுகள் கதறி அழுது, கண்ணீர் சொரிந்து உணர்வெழுச்சியுடன் இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், யாழ் பல்கலைக்கழக மணவர் ஒன்றியத்தினர், முள்ளிவாய்கால் மண்ணில் உயிர் நீத்தவர்களுடைய உறவினர்கள் என பெருந்திரளானவர்களின் பங்குபற்றலுடன் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களில் அரசியல் கட்சிகள், இளைஞர் குழுக்கள் மற்றும் சிவில் அமைப்புகள் இணைந்து நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுத்தனர்.

# பதற்றத்திலும் சுடரேற்றம்

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், காணாமல் ஆக்கப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் பிரகித் எக்னலியகொடவின் மனைவி சந்தியா எக்னலியகொட, காலிமுகத்திடல் போராட்டத்தின் முன்னணி செயற்பாட்டளரான ராஜ்குமார் ரஜீவ்காந்த் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, சில குழுவினர் அங்கு குறித்த நிகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், புலிகளை நினைவுகூர வேண்டாம் என்ற பதாகைகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு கலகமடக்கும் பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து, நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

# நந்திக்கடலில் அஞ்சலி

அந்தவகையில் நந்திக்கடலில் உயிர் நீத்த உறவுகளுக்கு வியாழக்கிழமை (18) மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளின் ஆத்மசாந்திவேண்டி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

**“ முள்ளி வாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளின் ஆத்மசாந்தி வேண்டி வற்றாப்பளை ஆலயத்தில் வழிபாடுகள் நடைபெற்றன**

இதன்போது கட்சியின் மூலக்கிளைகளின் உறுப்பினர்கள் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டார்கள். இதேவேளை இலங்கை தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியக்கலாநிதி சி.சிவமோகன் தலைமையில் முள்ளிவாய்க்கால் உயிரிழந்த மக்கள் நினைவாக நந்திக்கடல் பரப்பில் அஞ்சலி செலுத்தியுள்ளார்கள். நந்திக்கடலில் மற்றும் ஒருபகுதியில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

# ஜூன் முதல் வருகைதர தேவையில்லை

இதையடுத்து, மூன்று நாள்களின் பின்னர், பதிவுத் தபால் மூலம், விண்ணப்பதாரரின் வீட்டுக்கே, கடவுச்சீட்டு அனுப்பிவைக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, வியாழக்கிழமை (18) முதல் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு வரும் அனைவரும் உடனடியாக வளாகத்துக்குள் அழைக்கப்படுவார்கள் என்றும் மக்களை ஏமாற்றி பணம் பறிக்கும் பல தரகர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# ஷானி அபேசேகரவுக்கு போதிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை

ஷானி அபேசேகர தம்மைப் பாதுகாப்பதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது.

ஷானி அபேசேகரவுக்கு போதிய பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக அதிகாரிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ரொஹந்த அபேசூரிய குறிப்பிட்டார்.

தமது சேவை பெறுநருக்கு பாதுகாப்பு உத்தரவை அமல்படுத்தாத பிரதிவாதிகளுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை முன்வைக்க எதிர்பார்ப்பதாக ஷானி அபேசேகர சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய மன்றுக்கு அறிவித்தார்.

அதற்கமைய திருத்தப்பட்ட மனுவை தாக்கல் செய்ய மனுதாரருக்கு அனுமதி அளித்த நீதியரசர்கள் குழாம் திருத்தப்பட்ட மனுவை ஜூன் 28ஆம் திகதி தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டது.

# தென் இலங்கையில் நிறை குறைகிறது

அத்துடன், ஹட்சன் விரிகுடா பகுதியைச் சுற்றியுள்ள வட கனடாவும் குறைந்த ஈர்ப்பு விசை கொண்ட பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், நாசாவின் ஈர்ப்பு மற்றும் காலநிலை பரிசோதனை செயற்கைகோள் ஆய்வுகளில் இந்த வேறுபாடுகளை கண்டறிந்துள்ளது.

உதாரணமாக நியூசிலாந்தில் 68 கிலோ எடையுள்ள ஒரு பயணி, மாலைதீவு அல்லது கனடாவின் ஹட்சன் விரிகுடாவில் இருக்கும்போது 3 கிராம் வரை எடையை இழக்க நேரிடும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை வரும் சில சுற்றுலாப் பயணிகள், தங்களின் எடையில் வித்தியாசம் இருப்பதாக உணர்கின்றனர். அதேவேளை, அதில் இந்த ஈர்ப்பு விசை மாற்றமும் காரணமாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# கறுப்பு வான் நாடகமாடிய சிறுவன் கைதானார்

கறுப்பு வானில் ஏற்றி வந்த நிலையில் இந்தப் பகுதி வீதியில் வானில் இருந்து தப்பி ஓடி வந்துள்ளதாகவும் வானில் கத்தி வாள் போன்ற ஆயுதங்கள் மற்றும் பெண்களின் ஆடைகள் இருப்பதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்தான்.

காவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு சிறுவனின் புகைப்படத்தை அனுப்பி அவன் தொடர்பாக விசாரித்தபோது குறித்த சிறுவன் கடத்தப்பட்டதாக எந்தவித முறைப்பாடும் இல்லை எனவும் இவன் இவ்வாறு 3 தடவை வீட்டில் இருந்து பணத்தை எடுத்து தப்பி ஓடியவர் என தெரியவந்ததையடுத்து சிறுவனை கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட சிறுவனின் உறவினர்களை தொடர்பு கொண்டு வரவழைக்கப்பட்டதை அடுத்து வியாழக்கிழமை (18) பொலிஸ் நிலையத்துக்கு வந்த உறவினர்களிடம் சிறுவனை எச்சரித்து ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கின் ஆளுநரை

# வாழ்த்திய திகாமடுல்ல மாவட்ட எம்.பி



மாளிகைக்காடு நிருபர்

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமானை திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸ், ஜனாதிபதி செயலகத்தில் வைத்து சிநேகபூர்வமாக சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது, இளம் தலைவரான எனது நீண்டகால நண்பர் செந்தில் தொண்டமானை மலையக மக்கள் மட்டுமின்றி கிழக்கு மாகாணத்தில் வாழுகின்ற மக்களும் வாழ்த்துவதுடன் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் மத்தியில் ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தி, கிழக்கு மாகாணம் சிறந்து விளங்க அவர் பயணிக்க வேண்டிய நேரிய பாதைகள் தொடர்பில் பேசினோம் என்றும் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

# உருத்திர புரீஸ்வரர் கோவிலின் காணி அளவீடு இடைநிறுத்தம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

உருத்திரபுரம் சிவாலயத்தின் அளவீட்டுப் பணிகள் நேற்று (18) மக்களின் பலத்த எதிர்பால் நிறுத்தப்பட்டன.

கிளிநொச்சியின் மிகவும் பழைமை வாய்நத கோவிலான உருத்திர புரீஸ்வரர் கோவிலின் காணியை அளவீடு செய்வதற்காக கரைச்சி பிரதேச செயலகத்தால், அறிவுறுத்தல் வழங்கப்பட்டு இருந்தது. இதையடுத்து, குறித்த அளவீட்டுப் பணியை தடுத்து நிறுத்தும் நோக்கில் பொதுமக்கள், ஆலய நிர்வாகத்தினர் ஒன்று கூடியதால் குறித்த அளவீட்டுப் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.







அமரர் துரைரெட்னசிங்கத்தின் இரண்டு வருட பூர்த்தியை ஒட்டி

# கந்தளாயில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

எப். முபாரக்

திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் துரைரெட்னசிங்கத்தின் இரண்டு வருட பூர்த்தியை முன்னிட்டு கந்தளாயில்120 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் (17) வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு, கந்தளாய் பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. கந்தளாய் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற 120 பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு, துரைரெட்ண சிங்கத்தின் பிள்ளைகளால் வழங்கி வைக்கப்பட்டன.

கந்தளாய் பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம், கந்தளாய் விக்னேஸ்வரா வித்தியாலம் போன்ற பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.





இந்நிகழ்வில், அமரர் துரைரெட்ணசிங்கத்தின் பிள்ளைகள், கந்தளாய் சிவன் கோவில் தலைவர், பாடசாலை அதிபர்கள், சங்கங்களின் தலைவர்கள், பெற்றோர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டார்கள்.

# ஜெரோமை கைது செய்து நடவடிக்கை எடுக்கவும்

போதகருக்கு எதிராக சட்டத்தை அமல்படுத்துவதற்கு பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரிய மனு, எல்லே குணவன்ச தேரர் உள்ளிட்டோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ நாடு திரும்பியதும் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்படுவார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்திருந்தார்.

கடந்த சில நாள்களுக்கு முன்பு ஜெரோம் பெர்னாண்டோ என்ற போதகரால் பிற மதங்களை அவமதிக்கும் வகையில், கருத்துகள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து போதகருக்கு எதிராக பலரும் முறைப்பாடு செய்தனர்.

போதகரின் வாக்குமூலங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மகளுக்கு நஞ்சு பருக்கிய தந்தை

# பெண் பிள்ளைகளை தந்தையிடம் ஒப்படைத்துவிட்டு வெளிநாட்டுக்கு போகவேண்டாம்

செ.தி பெருமாள்

மஸ்கெலியா, மொக்கா தோட்ட மேற் பிரிவில் தந்தை ஒருவர் தனது 20 வயது மகளுக்கு நஞ்சு பருக்கிய சந்தேகத்தின் பேரில் மூன்றாம் திகதி இரவு கைது செய்யப்பட்டு 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கபட்டு இருந்தவர், மேலும் ஒரு குற்றச்சாட்டுக்கு உள்ளாகி, எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பணித்துள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது; நஞ்சு பருக்கியதாக கூறப்படும் 20 வயது பெண், 02ஆம் திகதி இரவு மஸ்கெலியா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லபட்டு, அங்கு சிகிச்சையளிக்கும் போது, சட்ட வைத்திய அதிகாரியிடம் தனது தந்தை நஞ்சு பருக்கியதாக கூறியுள்ளார்.

அதைத் தொடர்ந்து, மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார பணிப்புரையின் கீழ், சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். மேலும், சட்ட வைத்திய பரிசோதனையில், யுவதி பலமுறை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டமையும் தெரியவந்துள்ளது. தனது தந்தையே, தன்னை பல முறை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக யுவதி கூறினார். இதையடுத்தே, சந்தேக நபரை ஹட்டன் நீதிமன்ற நீதிவான் 31 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

இதுகுறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார கூறுகையில், சம்பந்தப்பட்ட யுவதியின் தாய் ஏழு மாதங்களுக்கு முன்னர் வெளிநாடு சென்றுள்ளார் எனவும் அவருக்கு 9, 11, 20 வயதுகளில் மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர் எனவும் கூறினார்.

இவ்வாறு மலையக பகுதிகளில் பெண் பிள்ளைகளை தந்தையின் பாதுகாப்பில் விட்டு செல்வதால், பல குற்ற செயல்கள் இடம்பெற்று வருவதாகவும் ஆகையால் மலையக பகுதிகளில் இனியும் வெளிநாட்டு வேலைக்கு பெண்கள் போவதை நிறுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

# “உங்களை நீங்கள் வெல்லுவதே உண்மையான வெற்றி”



நூருள் ஹுதா உமர்

இம்மாதம் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான வழிகாட்டலும், துஆப் பிரார்த்தனையும் அக்கரைப்பற்று பெரியபள்ளிவாசலில் எஸ். எம் சபீஸ் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

கடந்த பரீட்சையில் நீங்கள் பெற்ற மதிப்பெண்களைவிட அதிகமான புள்ளிகளை வருகின்ற பரீட்சைகளில் பெற்றுவிட்டால், உங்களை நீங்களே வென்று விடுவீர்கள். அதற்காக நேரத்தை ஒதுக்கி நன்னோக்கத்தோடு பரீட்சைக்கு தோற்றுங்கள் என இங்கு எஸ்.எம். சபீஸ் மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்

இந்நிகழ்வில் உலமாக்கள், ஓய்வு பெற்ற அதிபர்கள், கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஆலோசனைகளும் மாணவர்களுக்கான துஆப் பிராத்தனையும் இடம்பெற்றது.

# தெட்சண கைலாயத்தில் கிழக்கு ஆளுநர்





அ. அச்சுதன்

கிழக்கு மாகாண ஆளுநராக பதவி ஏற்ற செந்தில் தொண்டமான் நேற்று (18) காலை 10.30 மணிக்கு தெட்சண கைலாயம் என போற்றப்படும் திருகோணேஸ்வரத்தில் வழிபாட்டில் ஈடுபட்டார்.

# மஸ்கெலியாவில் அதிகரித்திருக்கும் சிறுத்தைகள் நடமாட்டம்

செ.தி பெருமாள்

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளான மஸ்கெலியா நகரில் உள்ள மின்சார சபை குடியிருப்பு, மாவட்ட வைத்தியசாலையில் உள்ள குடியிருப்பு ஆகிய பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களை, இரவு நேரத்தில் சிறுத்தைகள் பிடித்து செல்வதாக, இந்தப் பகுதிகளில் உள்ள குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து நல்லதண்ணி வன பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தும் பயன் இல்லை எனவும், மாலை 6 மணிக்கு பின்னர் வீடுகளிலேயே அடங்கி கிடக்க வேண்டிய நிலையில் உள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

மேலும், வைத்தியசாலையை அண்டிய பகுதிகளில் பற்றைக் காடுகள் நிறைந்து உள்ளதால் இங்கு சிறுத்தை, பன்றி, நரி போன்ற மிருகங்களின் நடமாடும் அதிகரித்துள்ளதாகவும் இதனை கட்டுப்படுத்த, சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள பற்றை காடுகள் அகற்ற, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் எடுக்க வேண்டும் எனவும் குடியிருப்பாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# இராணுவத்தினருக்கு அஞ்சலி



ஆ. ரமேஸ்

இலங்கையில் 30 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து, 14 வருடங்கள் பூர்த்தியை நினைவு கூரும் நிகழ்வு, நுவரெலியா சிங்க ரெஜிமென்ட் 3வது படையணி முகாமில் நேற்று (18) இடம்பெற்றது.

இதன் போது, யுத்தத்தில் உயிர் நீர்த்த இராணுவத்தினரை நினைவு கூரும் அஞ்சலி நிகழ்வு, இராணுவ மரியாதைகளுடன் நடத்தப்பட்டது. இதன்போது, உயிர் நீர்த்த இராணுவ வீரர்களின் குடும்பத்தவர்கள், நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட உள்ளிட்ட பிரதேச செயலாளர்கள், மேலதிக செயலாளர்கள், முப்படைகளின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டு, மலர்கள் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்த நிகழ்வில், யுத்த காலத்தில் உயிர் நீர்த்த நுவரெலியா பிரதேசத்தை சேர்ந்த இராணுவ வீரர்களின் குடும்பத்தவர்களுக்கு உதவு தொகையும் வழங்கி வைக்கப்பட்டது.

# ஓட்டோவில் இருந்து விழுந்து இளைஞன் மரணம்



எஸ். சதீஸ்

பொகவந்தலாவ, டியன்சின் தோட்டத்தில், 13ஆம் இலக்க லயன் குடியிருப்புக்கு அருகாமையில் ஓட்டோவில் இருந்து விழுந்த இளைஞன் உயிரிழந்துள்ளதாகவும் இந்தச் சம்பவம் புதன்கிழமை (17) இரவு ஏழு மணியளவில் இடம்பெற்றதாகவும் சம்பவம் தொடர்பில் உயிரிழந்த இளைஞனின் சித்தப்பா, பொகவந்தலாவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: பம்பரலாங்கந்த தோட்டத்தில் இருந்து டியன்சின் தோட்டத்தில் உள்ள அவரது சித்தப்பாவின் வீட்டுக்கு வந்திருந்த போது, குறித்த வீட்டில் இருந்து உறவினரின் வீட்டுக்குச் செல்லும் வழியில், ஓட்டோவில் இருந்து தவறி விழுந்து, இளைஞன் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஓட்டோவை செலுத்திய நபரும் மற்றைய நபரும் மதுபோதையில் இருந்ததாகவும் சம்பவத்தில் உயிரிழந்த நபர், பம்பரலாங்கந்த தோட்டத்தை சேர்ந்த 34 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான மும்மூர்த்தி ரஞ்சன் என பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் ஹட்டனில் இருந்து தடயவியல் பொலிஸார் வரைவழைக்கப்பட்டு விசாரனைகளை ஆரம்பித்துள்ளதோடு ஹட்டன்

நீதிமன்ற பதில் நீதவான் நாராயணன் பாத்தீபன் தலைமையில் மரண விசாரனைகள் இடம்பெற்றன.

# பிள்ளைபிடிக்க வந்தவர் மடிக்கி பிடிப்பு

## இருவர் தப்பி ஓட்டம்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, குருக்கள்மடம் பிரதேசத்தில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய மூன்று இளைஞர்கள் கொண்ட குழுவை, பொதுமக்கள் சுற்றிவளைத்தபோது, இருவர் தப்பி ஓடிய நிலையில், ஏறாவூரைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் மடக்கிபிடிக்கப்பட்டு களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் புதன்கிழமை (17) இடம்பெற்றது.

குருக்கள்மடம் வீதி வளைவை அண்மித்த வீதியில், சம்பவதினம் பிற்பகல் 2 மணிக்கு சந்தேகத்துக்கு இடமாக மூன்று இளைஞர்கள் நடமாடுவதை அந்தபகுதி மக்கள் அவதானித்த நிலையில், அவர்கள் சிறுவர்களைக் கடத்தும் கும்பல் என அவர்களைச் சுற்றி வளைத்தனர்.

இதன்போது, இரண்டு இளைஞர்கள் தப்பி ஓடியதையடுத்து, ஒருவனை பொதுமக்கள் மடக்கிப்பிடித்து, பொலிஸாரிடம் ஒப்படைத்ததை அடுத்து, அவரை பொலிசாஸார் கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ஏறாவூரைச் சேர்ந்தவர் எனவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சுவாமி கௌதமானந்தா ஜீ இலங்கை வந்தார்



வீ.ரி சகாதேவராஜா

உலகளாவிய இராமகிருஷ்ணமடம் மற்றும் மிஷனின் துணைத் தலைவரும் சென்னை இராமகிருஷ்ண மடத்தின் தலைவருமான அதிவண ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தா ஜி மஹராஜ் ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு, நேற்று (18) கொழும்புக்கு வருகை தந்தார்.

22 ஆம் தேதி வரை மட்டக்களப்பில் பல நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ள அவர், இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில், கல்லடி இராமகிருஷ்ண மிஷன் ஆசிரம திருக்கோவிலில் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.



கொழும்பில் வேலை செய்த

# இளைஞனைக் காணவில்லை

நிதர்சன் வினோத்

மயிலிட்டி - தாளையடி வீதியைச் சேர்ந்த சிவகுமார் பிந்துசன் என்ற 29 வயதான இளைஞரே, புறக்கோட்டையில் வேலை செய்து கொண்டிருந்த காலத்தில் காணாமல் போயுள்ளார்.

இளைஞன் காணாமல் போனமை தொடர்பாக 2022.10.13 அன்று பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தும் இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என இளைஞனின் தாயார் சிவகுமார் காந்திமதி தெரிவிக்கின்றார்.

மனநிலை பாதிக்கப்பட்ட குறித்த இளைஞன், அதற்குரிய சிகிச்சைகளையும் பெற்றுக்கொண்டிருந்தாக கூறும் தாயார், எழு மாதங்களாகத் தேடியும் குறித்த இளைஞனை கண்டுபிடிக்க இயலாத நிலை தொடர்வதாகவும் தெரிவித்தார்.

குறித்த இளைஞன் தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் 0775988204, 0775547218 என்கிற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

# வவுனியாவில் முள்ளிவாய்க்கால் நினைவுதினம் அனுஷ்டிப்பு

க. அகரன்

வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால், முள்ளிவாய்க்கால் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

போராட்டம் இடம்பெறும் பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் உள்ள கொட்டகைக்கு முன்பாக, அமைதிவழி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பின்னர் மலர் தூவி மெழுகுதிரி ஏற்றியும் அஞ்சலி செலுத்தினர்.




# நீர்கொழும்பில் கரை ஒதுங்கிய இளைஞரின் சடலம்



எம்.இசட் ஷாஜகான்

நீர்கொழும்பு, பலகத்துறை பகுதியில் இறந்த நிலையில் சடலம் ஒன்று கரை ஒதுக்கி உள்ளது. ஹப்புதளை, பிளக்வுட் ஸ்டேட் பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடைய பாலசுப்பிரமணியம் யோகேஸ்வரன் என்ற திருமணமாகாத இளைஞரே இவ்வாறு சடலமாக கரை ஒதுங்கி உள்ளார்.

இவர், நீர்கொழும்பு, பெரியமுல்ல பகுதியில் ஹோட்டல் ஒன்றில் சமையல்காரராக தொழில் செய்பவர் ஆவார்.

# மீண்டும் பரபரப்பாகும் மதம் எனும் மதம்

ஒவ்வொரு மனிதனினதும் ஒழுக்கம் என்பது, அவரவர் பின்பற்றும் மதங்கள் மற்றும் அம்மதங்கள் தெரிவிக்கும் வாழ்க்கைத் தத்துவங்கள் போன்றவற்றில் தங்கியுள்ளது. சைவம், இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் இலங்கையின் பெரும்பான்மைச் சமூகத்தின் மதமான பௌத்தம் என அனைத்துமே மனிதன் வாழ்வதற்கு அவசியமான வாழ்க்கைத் தத்துவங்களை வலியுறுத்துகின்றன.

இந்த மதங்களைப் பின்பற்றுவோரில் பலர், தமக்கு உகந்ததைப் போல அந்த மதங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துகளை மாற்றியமைத்து, குறித்த மதத்தை பின்பற்றாத ஏனையவர்களை, இன்னல்களுக்கு ஆளாக்கிடும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

பௌத்த மதத்தை பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கையில், இந்த வாரத்தின் பேசுபொருள், மதப் போதகரான ஜெரோம் என்பவர், பௌத்த மதத்தைப் பற்றி, கடந்த வாரம் உரையாற்றியிருந்த சர்ச்சைக்குரிய கருத்தாகும்.

இதற்கு முன்னரும் இவர் இலங்கை கிரிக்கெட் அணி, கடந்த ஆண்டின் ஆசியக் கிண்ணப் போட்டியில் வெற்றி பெற்று இருந்ததைத் தொடர்ந்து, சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டு, அனைவரின் கவனத்தையும் தன்பால் ஈர்த்திருந்தார்.

பௌத்தமதத்தைப் பற்றிய சர்ச்சைக்குரிய கருத்தும், அனைவரின் கவனமும் தம்பால் திசை திரும்ப வேண்டும் என்ற நோக்கத்தில் அவராலே நிறைவேற்றப்பட்டதா, அல்லது நாட்டில் பேசு பொருளாக இருந்த 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பலின் நட்டஈடு தொடர்பான வழக்கு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு அதை நிறைவேற்றுவது, பிரதமராக மஹிந்த ராஜபக்‌ஷவை நியமிப்பது, வட பகுதிகளில் தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகள், புதிய ஆளுநர்களின் நியமனங்கள் தொடர்பான பல விடயங்களை பின்தள்ளி, இந்த மதம் சார் கருத்தை வெளிக்கொணர்ந்து, சமூகத்தில் ஒருவிதமான சலசலப்பை ஏற்படுத்துவதாக உருவாக்கப்பட்டதா எனும் கேள்விகளும் எழுந்துள்ளன.

இலங்கை அரசியலில் இனம், மதம் ஆகியன இரண்டறக் கலந்துள்ளன. கடந்த காலங்களில் ஆட்சிபீடமேறிய பல தலைவர்கள் மற்றும் கட்சிகள், இந்த இனவாதம், மதவாதம் ஆகிய கருத்துகளை மக்கள் மத்தியில் பேசியே, தமது ஆட்சியை கைப்பற்றியதுடன், அதனை தக்க வைத்திருந்தனர்.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து, நாட்டின் பல பாகங்களைச் சேர்ந்த முஸ்லிம் இனத்தவர்களின் சொத்துகள் சேதப்படுத்தப்பட்டு இருந்தன. அதுபோன்றே, 1983 ஜூலை, தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் நடந்தேறின. இவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்விதமான இழப்பீடுகளும் அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை; பட்டப் பகலில் இந்த வன்முறைகளை நடத்தியவர்களுக்கு எதிராக, சட்டமும் ஒழுங்கும் எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இவ்வாறிருக்க, பெரும்பான்மை மக்கள் சிங்கள பௌத்தர்கள் என்பதால் அவர்களுக்கும், அவர்களின் மதத்துக்கும் ஆபத்து நேர்ந்துள்ளது என்பதைப் போல, சித்திரிக்கும் சம்பவங்கள் இனியும் நடந்தேறும். அதன் ஆரம்பகட்டம் தான் இந்தப் போதகரின் கடந்தவாரப் பேச்சு. ஏனெனில், விரைவில் தேர்தல் ஒன்று நடைபெற உள்ளதல்லவா!



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

திணிக்கப்படும் கருத்துகள் நிரந்தரமாக இருக்காது. ஒருவரின் நல்ல செயல்களைப் பொறுக்காது, தேவையற்ற அறிவுரைகளில் கவனம் செலுத்துதல் ஆகாது.

எனினும் அநேகர், தங்களின் தேவையற்ற கருத்துகளை மக்களிடம் பிரசாரம் செய்வார்கள். இதை நம்புகின்றவர்கள் அல்லற்படுகின்றனர்.

தவறான விளம்பரம் தானாகக் கரைந்துவிடும். எனினும் ஏமாற்றும் விளம்பரம் செய்வோரால் படும் துன்பம் சொல்லில் அடங்காது.

சிந்திக்காமல் காரியங்கள் செய்தால், எதிலும் சித்தியடைய முடியாது. இன்று அரசியல் மாற்றங்கள், கலவரங்கள், விலைவாசி உயர்வு எனப் பல பிரச்சினைகளால் மக்கள் சோர்ந்து களைப்படைந்து விட்டார்கள். அரசியலில் மக்கள் எடுத்த தவறான முடிவை, இன்று மக்கள் அனுபவிக்கிறார்கள். இதில் இருந்து மீண்டுவர என்ன செய்யவேண்டும் எனத் திகைப்பதைவிட, உழைப்பதே ஒரே வழி.

திடமான மனோநிலையில் யாவரும் இயங்க வேண்டும். வாழக்கையின் சுழற்சியில் எல்லாமே நடக்கும். விழித்து எழுவதே மறுமலர்ச்சியை உருவாக்கும்.

-பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

கறுப்பு ஜூலை நாற்பதாண்டுகளின் பின்னர் – 01:

# இலங்கை இனமுரண்பாட்டின் திருப்புமுனை



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையின் வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்த நிகழ்வுகள் மிகச்சில! அவை ஒவ்வொன்றும் வரலாற்றின் வழித்தடத்தில் விட்டுச்சென்ற செய்திகள் சிந்தனைக்குரியன.

75 ஆண்டுகால சுதந்திர இலங்கையின் வரலாற்றின் பெரும்பகுதியை, இனமுரண்பாடு நிறைத்திருப்பது தற்செயலானதல்ல. சுதந்திரத்துக்கு முந்தைய இலங்கையிலேயே இனமுரண்பாட்டுக்கான வித்துகள் இருந்தன.

மகாவம்சம் என்ற புனைவு வரலாறாகக் கருக்கொண்டதும், அதன் வழிப்பட்ட சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனையும் இதன் தொடக்கப் புள்ளிகள். 19ஆம் நூற்றாண்டு இறுதிப் பகுதிகளில் 'கொச்சிக்கடை கலவரம்' எனப்படும் பௌத்த-கத்தோலிக்க மோதலும் 1915இல் நடந்தேறிய சிங்கள (பௌத்த) - முஸ்லிம் கலவரங்களும் இலங்கையில் சிங்கள பௌத்த பெரும்பான்மைத் தேசியவாதம் சகிப்புத் தன்மையற்றது என்பதையும் இனத்தை விட மதம், அரசியலில் முக்கிய பங்கு வகித்ததை நாம் உணரலாம்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இலங்கை தேசிய காங்கிரஸில் ஏற்பட்ட முரண்பாடுகள், சுதந்திர இலங்கையில் பன்மைத்துவ சமத்துவ சமூகம் என்பது சவால் நிறைந்தது என்பதைக் காட்டி நின்றது.

சுதந்திர இலங்கையின் முதலாவது அபிவிருத்தித் திட்டங்கள், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மையப்படுத்தி இருந்தன. மலையகத் தமிழரின் குடியுரிமை பறிப்பு, ஜனநாயகப் படுகொலையின் தொடக்கத்துக்குக் கட்டியம் கூறியது.

இந்தப் பின்புலங்களில், சுதந்திரமடைந்து 35 ஆண்டுகளின் பின்னர், 1983 இல் நடந்தேறிய இனக்கலவரம், இலங்கையை முழுமையாகத் திருப்பிப்போட்டது. 'ஆடிக்கலவரம்', 'ஜூலைக் கலவரம்' எனப் பலவாறு இது அழைக்கப்படுகிறது. இந்தக் கொடுநிகழ்வை, 'கலவரம்' என்று சுட்டுவதே தவறானது. ஆனால், வரலாற்றில் அது அவ்வாறு தான் அழைக்கப்பட்டு, பொதுப்புத்தி மனநிலையில் ஒரு கலவரவமாகவே நிலைபெற்றுள்ளது.

இதன் பின்னாலுள்ள அரசியலும் வரலாறும் கவனிப்புக்கு உள்ளாகவில்லை. இக்கொடூரம் நடந்தேறி இவ்வாண்டுடன் 40 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்த 40 ஆண்டுகால வரலாற்றை இணைக்கின்ற ஒரு பொது இழை, இனமுரண்பாடு ஆகும்.

இன்றைய இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கும் இனமுரண்பாட்டுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல், இலங்கையின் எதிர்காலம் வளமானதாக இருக்கவியலாது.

இன்றைய நெருக்கடியை, வெறுமனே பொருளாதாரப் பிரச்சினை என்ற ஒற்றைப் பரிமாணத்துக்குள் அடக்கிவிட முடியாது. ஆனால், அதை அவ்வாறு பார்க்கவே அரசாங்கமும் அதிகாரவர்க்கமும் விரும்புகிறது. கதையாடல்கள் அதன் வழிப்பட்டே அமைக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் தேசியவாத எழுச்சியின் வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால், வர்க்கப் பரிமாணத்தையும் ஒடுக்கப்பட்டோரின் பார்வையில் வரலாறு சொல்லப்படாமையையும் அவதானிக்கலாம். இது தற்செயலானதல்ல; வரலாறு என்பது வெறுமனே நிகழ்வுகளின் பதிவு அல்ல. அதில் எது பதியப்படுகிறது, எது விடுபடுகிறது, எது திரித்தோ மாற்றியோ எழுதப்படுகிறது என்பன எல்லாம் அதிகாரம் பற்றிய கேள்வியுடன் தொடர்புடையவை.

நமக்குச் சொல்லப்படுகிறவை உண்மைகளா, பொய்களா என்பது ஒரு புறமிருக்க, அவை ஏன் குறிப்பிட்ட விதங்களில் சொல்லப்பட்டுள்ளன என்றும் தொடர்ந்தும் சொல்லப்பட்டு வருகின்றன என்றும் நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

எழுதப்பட்ட வரலாறு குறிப்பிட்ட சில வர்க்க நலன்களால் சிறைப்பிடிக்கப்பட்டு உள்ளது. சமூக விடுதலைக்கான போராட்டம் தவிர்க்க முடியாமலே வரலாற்றையும் விடுவிக்கிற ஒரு போராட்டமாகவும் அமைய நேருகிறது.

நாம் விரும்புகிற மனித சமத்துவமுள்ள ஒரு சமூகத்தை அடைய வேண்டுமாயின், சமூக மாற்றங்கள் எவ்வாறு நேர்ந்தன? அந்த மாற்றங்களின் பின்னாலிருந்த இயங்கு சக்திகள் எவை? அவற்றை இயலுமாக்கிய சூழ்நிலைகள் எவை என்ற உண்மைகளின் அடிப்படைக் கூறுகளை, எழுதப்பட்ட வரலாற்றுக்குள் இருந்து வடிகட்டி எடுக்க வேண்டிய தேவை நமக்குள்ளது. வரலாற்றுத் திரிப்பும் மறைப்பும் நலன்களைப் பேணும் முக்கிய கருவிகளாக உள்ளன.

இனங்களுக்கு இடையிலான பகைமையாக வரலாறு சித்திரிக்கப்படுகிற போது, உண்மையாகவே சமூக முரண்பாடுகளின் வேராக இருந்து வந்துள்ள அடிப்படையான சமூகப் பிரிவுகள், அதாவது சமூக ஏற்றத்தாழ்வுகளை அடையாளப்படுத்துகிற பிரிவுகள் மறைக்கப்படுகின்றன. இந்தப் பின்புலத்திலேயே இத்தொடர் 1983இல் நடந்தேறிய திட்டமிட்ட வெறிச்செயலின் பின்னணி, அதை சாத்தியமாக்கிய காரணிகள், அது ஏற்படுத்திய தாக்கம் போன்றவற்றை நோக்க விளைகிறது.

எல்லாவற்றிலும் மேலாக, இலங்கையர்களாக நாம் இந்தக் கொடுஞ்செயலில் இருந்து கற்றுக் கொள்ளாத பாடங்கள் எவை? சிறுபான்மைச் சமூகங்கள் இன்னமும் மோசமான குறுந்தேசியவாத அரசியலின் வழிப்பட்டு சீரழிவதற்கான அடிப்படைகள் எவை? ஒடுக்கப்பட்ட மக்கள் இன்னமும் மேலும் ஒடுக்கப்படுவதையும் அதற்கு சிறுபான்மைத் தேசியவாதங்களின் முக்கியமான பங்கு யாது ஆகிய கேள்விகளையும் ஆழ நோக்க விளைகிறது.

சமூகத்தில் ஆழ வேரூன்றிய பண்பாட்டு வேர்களைக் களைவதில் நேரடியாகக் குறுக்கிடுவதால் வரக்கூடிய எதிர்ப்புகளைக் கருத்தில் கொண்டே இலங்கையின் கொலனிய நிர்வாகம் பௌத்த, சைவ மறுமலர்ச்சி இயக்கங்களுக்குத் தடையாகத் தன்னைக் காட்டிக் கொள்ளவில்லை.

கொலனியத்தைத் தூக்கி எறியாமல், சமூக அடையாளங்களையும் நலன்களையும் வற்புறுத்துகிற நோக்கிலேயே பௌத்த, சைவ, இஸ்லாமிய மீளெழுச்சிகள் நிகழ்ந்தன. இவற்றிடையே குறிப்பிடத் தக்க ஒற்றுமைகள் இருப்பினும் முக்கியமான வேறுபாடுகளும் இருந்தன. இது பேசப்பட வேண்டியதொன்று.

அதைப்போலவே, இருபதாம் நூற்றாண்டின் முதல் காற்பகுதி வரை சிங்களவரிடையே சாதி அடிப்படையிலான அரசியல் போட்டி இருந்த போதும், தமிழ்-சிங்களவர் என்ற அடிப்படையிலான முரண்பாடு முன்னணிக்கு வரவில்லை. இனத்தை விட, மதம் அரசியலில் முக்கிய பங்கு வகித்தது. சாதியும் மதமும் மொழியை விட முக்கியமான அடையாளங்களாகச் செயற்பட்டன.

தமிழர் - சிங்களவர் என்ற மொழிவழி வேறுபாட்டின் அடிப்படையில் அரசியல் விருத்தி பெறாமைக்கான காரணம், எந்த விதமான பண்பாட்டு ஒற்றுமைகளையும் விட மேலாக, அந்த இரு அடையாளங்களுக்கும் உட்பட்ட மேட்டுக் குடிகளுக்கும் ஓரளவு வசதி படைத்த பகுதியினருக்கும் இடையே போட்டிக்குரியதாகப் பொதுவாக எதுவுமே இல்லாமை என்பதை நாம் கவனிக்க வேண்டும். சிங்கள கொவிகம, தமிழ் வேளாள மேட்டுக் குடிகளிடையே வலுவான நல்லுறவு இருந்தது. இது இன்றுவரை பேசப்படாமல் தவிர்க்கப்படுகின்ற ஒன்று!

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலும் தேசிய அரசியல் உருவாக்கத்தில் பங்களிக்கக் கூடியவர்களாகத் தமிழரும் சிங்களவருமே முன்னிலையில் நின்றனர். எனினும் வர்க்கமும் சாதியும் அவர்களிடையில் இருந்த உறவைத் தீர்மானித்தன என்பதை, கொலனிய ஆட்சியின் கீழான சீர்திருத்தங்களின் பின்னர் தெளிவாகவே காண இயலுமாயிற்று.

கொலனிய ஆட்சியின் கீழ் கொலனிய எசமானர்களின் தயவில் ஆட்சி அதிகாரங்களில் சிறியதொரு பங்கு பெற்ற சில குடும்பங்கள், தொடர்ந்தும் ஆதிக்கத்தில் இருந்தன. அந்த எண்ணிக்கையை விரிவுபடுத்துகிற சூழ்நிலை ஏற்பட்ட போது, அவ்விரிவாக்கத்தில் சாதியும் வர்க்கமும் முக்கிய பங்கு வகித்தன.

ஏன் அவை முன்னின்றன? அதற்கான காரணம் என்ன? இது எவ்வாறு இலங்கை இனமுரண்பாட்டில் சாதாரண உழைக்கும் மக்களைப் பாதித்தது என்ற வினா விரிவான ஆய்வுக்கு உட்பட்டதில்லை.

இவற்றைத் தவிர்த்து, இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையையோ அதைப் புதிய திசைவழிக்கு இட்டுச்சென்ற 1983 வன்செயல்களையோ நோக்கவியலாது. இவ்வன்செயல்கள் தவிர்த்திருக்கக் கூடியவை; ஆனால், அதை அரசாங்கம் விரும்பவில்லை.

இந்நிகழ்வு, இலங்கையின் அயலுறவுகளில் பாரிய மாற்றங்களை உண்டுபண்ணியது. மேற்குலகக் கவனம், தமிழர்களுக்கு ஆதரவானது என்ற மாயை வலுப்பட்டதன் கொடிய விளைவுகளை, முள்ளிவாய்க்காலில் முற்றுப்பெற்ற ஆயுதப்போராட்டம் தெட்டத் தெளிவாகக் காட்டியது.

ஆனால், இன்று அந்தக் கொடிய நினைவுகளின் 14 ஆண்டுகளின் பின்னரும் மேற்குலகின் மீதான மாயை இன்னும் வலுவாகவுள்ளது; இது வருந்தத்தக்கது. தமிழ்ச் சமூகம், இந்த கையறு நிலைக்கு ஏன் வந்தது? இதற்கு வெறுமனே சிங்கள-பௌத்த பெருந்தேசியவாத அகங்காரம் மட்டுமே காரணமா?

இது கவனமாகவும், பொறுப்புணர்வுடன், சுயவிமர்சனத்துடனும் தமிழ்ச் சமூகம் கேட்கவேண்டிய கேள்வி. இக்கேள்வியை அமைதியாகக் கடந்துபோவது, கொல்லப்பட்ட மக்களுக்கும் விடுதலைக்காக உயிர்நீர்த்தோருக்கும் இழைக்கும் அநீதி.

சிங்கள-பௌத்த பேரினவாதத்தை நாம் எவ்வாறு எதிர்கொண்டோம்? இதில் நமது தலைமைகளின் பங்கென்ன? இன்னமும் தீபாவளி, பொங்கல், வருடப்பிறப்பு என்று புதிய கதைகளோடு தொடரப்போகிறோமா?

உடல்களின் மீது அரசியல் செய்வது புதிதல்ல. அதைத் தொடக்கி வைத்ததும் 1983 தான். நாம் கற்காத பாடங்களையே கடந்த 40 ஆண்டுகால வரலாறு காட்டி நிற்கிறது என்பதே பெருந்துயர்.

## கடிதங்கள்

பொகவந்தலாவை, மஸ்கெலியாவுக்கு

### கால்நடை வைத்தியர்கள் அவசியம் தேவை

மஸ்கெலியா, பொகவந்தலாவை பிரதேச கால்நடை வைத்திய அதிகாரிகள் இடம்மாற்றம் பெற்றதன் பின்னர், கடந்த பல மாதங்களாக இந்த இரண்டு இடங்களும் காலியாகவே காணப்படுகின்றன. எனவே, இந்த இரண்டு பிரதேசங்களின் கால்நடை தொடர்பான விடயங்களை, ஹட்டன் கால்நடை வைத்திய அதிகாரியே கவனித்து வருகின்றார்.

அவசர தேவைகளின் போது, ஹட்டன் கால்நடை வைத்திய அதிகாரியின் வருகை, தூரம் காரணமாக தாமதமடையும்போது, தமது பெறுமதியான கால்நடைகளை இழந்துள்ளதாக இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

பிரதேச கால்நடை வைத்திய அதிகாரிகள், தமது கால்நடைகளுக்கான தேவை மற்றும் அதன் பராமரிப்பின் மீது அதிக கவனம் எடுத்தமையானது, பெரும் வரப்பிரசாதமாக காணப்பட்டதாகவும். தற்போது கால்நடை வைத்திய அதிகாரிகள் இன்மையானது, பல இலட்சம் பெறுமதியான கால்நடைகளை தாம் இழக்க வேண்டி ஏற்பட்டதானது, தமது குடும்பங்களை பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளி விட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, விரைவில் பொகவந்தலாவை, மஸ்கெலியா பிரதேசங்களுக்கான கால்நடை வைத்திய அதிகாரிகளை நியமிக்க, சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கால்நடை வைத்திய அதிகாரி காரியாலய பிரதேச கால்நடை வளர்ப்பாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

எம். பிரபா

சத்தியம், பொறுமை, சாந்தம், அடக்கம்

# மார்க்கண்டு சிவாமிகளின் உள்ளடக்கம்

சிவயோகசுந்தரம் மயில்வாகனம்

ஸ்ரீமத் மார்கண்டு சுவாமிகள் வைகாசி மாதம் கார்த்திகை தினத்தில் சமாதியடைந்தார். இதையொட்டி இன்று (19) கைதடியில் அமைந்துள்ள மார்கண்டசுவாமிகள் ஆச்சிரமத்தில், திருவடி பூஜையும் யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை பராயணமும் நடைபெறும்.

ஈழநாடு செய்த தவப்பயனாக, 20ஆம் நூற்றாண்டில், பல சித்தர்களும் யோசிகளும் அவதரித்தார்கள். அவர்களில் யோகர் சுவாமிகள் எங்கள் குருநாதராவார்.

யோகர் சுவாமிகள் மக்களோடு மக்களாக வாழ்ந்து, தமிழர், சிங்களவர், ஆங்கிலேயர் எனப் பல இனங்கள், மதங்களைச் சார்ந்தவர்களுக்கும் வழிகாட்டி அருள்புரிந்தார். யோகர் சுவாமிகளின் ஆளுகைக்கு உட்பட்டவர்களில் முதன்மைச் சீடராக வாழ்ந்து, வழிகாட்டியவர் கைதடியூர் மார்க்கண்டு சுவாமிகள் ஆவார். இவர், வேடம் ஒன்றும் விரும்பாதவர்; தாளம்மேளம் இல்லாமல் வளர்ந்த சிவதொண்டர் எனப் போற்றப்படுகின்றார்.

மார்க்கண்டர் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரான்பற்று என்னும் சிற்றூரில் 1899ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையார் சுன்னாகம் சந்தையில் வியாபாரம் செய்யும் சிறு வியாபாரியாவார்.

கந்தரோடை இந்துக் கல்லூரியில் கல்வி கற்றவர் 'சீனியர் கேம்பிரிச்' சோதனையில் சித்தியடைந்து நிலஅளவை திணைக்களத்தில் எழுதுவினையராக கடமை ஏற்றார். மார்க்கண்டர் தியத்தலாவையில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில்தான், அவர் யோகமுனியின் அருட்பார்வைக்கு இலக்கானார். 'வெளிமாதிரி ஒன்றும் செய்யாத இளைஞர்' மார்க்கண்டருக்கு ஆத்ம தாகத்தை ஆக்கிவிட சித்தம் வைத்தார், எங்கள் குருநாதர்.


சத்தியம், பொறுமை, சாந்தம், அடக்கம் என்பவை மார்க்கண்டரிடம் பொருந்தியிருந்ததைக் கண்ட யோகநாதர், யாரும் அறியாமல் அந்தரங்கமாக அவருக்கு அருளைச் சொரியச் சித்தமானார்.

நில அளவைத் திணைக்களத்தில் வேலை செய்த மார்க்கண்டருக்கு எங்கள் குருநாதர், 'வடதிசை காட்டும் கருவியைப் போல் இரு' என்று கூற, மார்க்கண்டரும் தமது மனத்தை எப்பொழுதும் பரப்பிரம்மத்தை நோக்கிய வண்ணம் சாதனை புரியத் தொடங்கினார்.

"நில அளவை செய்வதற்கு பாதைகளை வெட்டுவது போல், எங்கள் பாதைகளில் வரும் தடைகளை, நாங்களே வெட்டி நீக்க வேண்டும்; எங்களை நாங்களே திருத்த வேண்டும். மற்றவர்களின் உதவியை பார்த்திருக்கக் கூடாது" போன்ற உபதேசங்கள் உபதேசிக்கப்பட்டன. யோக முனியும் மலைநாட்டுக்குச் செல்லும் போதெல்லாம் மார்க்கண்டருக்கு உபதேசங்கள் செய்த வண்ணம் இருந்தார்.

மார்க்கண்டர் தியத்தலாவையில் இருந்து மாற்றம் பெற்று, கொழும்பில் சிலகாலம் தொழில் புரிந்தார். சனசந்தடி மிக்க கொழுப்பு மாநகரில், 'சனமருள் சாத்திரமருள்' என்ற குருநாதரின் எச்சரிக்கை பல உண்மைகளை உணரவைத்தது. மனம் ஒடுங்கிய இடமே ஆறுதலைத் தரும் என்னும் உண்மையையும் உணரலானார்.

50ஆவது வயதில் மார்க்கண்டர் உத்தியோகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, கொழுப்பிலிருந்து நேராக கொழும்புத்துறையில் யோகநாதன் குடிகொண்டிருந்த கொட்டிலை நோக்கி ஓடிவந்து, யோகர் சுவாமிகளின் பாதங்களில் வீழ்ந்து, 'இனி நீயே கதி'யென சரணடைந்தார்.



தவத்திரு கைதடி மார்க்கண்டு சுவாமிகள்

குருநாதன் அவரை அடைக்கலமாக ஏற்று, வண்ணார்பண்ணையில் இருக்கும் ஒரு வீட்டில் தங்கச் செய்தார்.

தெய்வ சித்தத்தை ஒருவரும் அறியார். அது மறைவாகவே இருக்கும். ஆனால், மகான்களுக்கு அது தெளிவாகத் தெரியும். மார்க்கண்டரை அமர்த்தும் இடம், யோகர் சுவாமிகளால் எப்பவோ, தேர்ந்தெடுக்கப்பட்டது.

1938ஆம் ஆண்டு, யோகர் சுவாமிகள் கைதடிக்கு சென்றபோது, விஸ்வலிங்கம் ஆசிரியரின் தகப்பன் சின்னத்தம்பி, சுவாமிகள் தனியாகத் தங்க குடிசை ஒன்று இந்த வீட்டின் முன்பக்கத்தில் இருக்கின்றது என்று கூறினார். அதற்கு யோகர் சுவாமிகள், "பொறுத்திரு! அதற்கு இன்னும் சிலகாலம் இருக்கிறது" என்று கூறினார்.

ஆசிரியர் விசுவலிங்கம் குறைந்தது ஒரு கிழமைக்கு ஒருக்காலாவது கொழும்புத்துறை சென்று, சுவாமிகளைத் தரிசிப்பார். 1950ஆம் ஆண்டு, கொழும்புத்துறை சென்ற விசுவலிங்கத்தை யோகர் சுவாமிகள் அங்கு தங்குமாறு பணித்தார். அடுத்த நாள் காலையில், "விசுவலிங்கம் இனிமேல் உனக்கு கைதடியில் இருக்க நல்லதொரு சினேகிதனைத் தருகின்றேன். அவன் போகும்போது உங்களுக்கு எல்லாம் தந்துவிட்டுப் போவான். நான் நாளை கைதடிக்கு அவனையும் அழைத்து வருவேன்" எனக் கூறினார். விசுவலிங்கமும் உடனே கைதடிக்குச் சென்று, சுவாமிகளின் வரவை எதிர்பார்த்த வண்ணம் இருந்தார்.

யோகர் சுவாமிகள், தாம் சொன்னவரோடு காரில் கைதடிக்கு வந்தார். "இன்று நல்ல நாள்" என்று கூறிய யோகர் சுவாமிகள், அன்று மத்தியானம், அந்த ஆச்சிரமத்திலேயே, ஒரு கறியும் சோறும் சமைத்து குருவும் சீடரும் உண்டபின்னர், யோகர் சுவாமிகள் கொழும்புத்துறைக்கு ஏகினார்.

மார்க்கண்டரும் இந்த ஆச்சிரமத்தில் இருந்து, உயர் ஞான சாதனைகளில் ஈடுபட்டார். யோககுருநாதனும் அடிக்கடி இக்கொட்டிலுக்கு வந்து, நற்சிந்தனைகளை புகட்டினார். மார்க்கண்டரும் ஆசான் அருளால் ஆசான் ஆனார். எல்லோரும் அவரை 'மார்க்கண்டு சுவாமிகள்' என அன்பாக அழைத்தனர்.

மார்க்கண்டு சுவாமிகள் நற்சிந்தனை மனதில் புனித ஏடாக விரிந்துகிடந்தன. அவர், பிராணனை அடக்கி பிராணாயாமப் பயிற்சியில் ஈடுபட்டார். ஆனால், யோகர் சுவாமிகள், "மூச்சைப்பிடித்து பிராணாயாமம் செய்யத்தேவையில்லை. சிவத்தியானம் செய்ய இவை எல்லாம் வரும். சும்மா இருக்க சுகம் உதயமாகும். குண்டலினியின் எழுச்சி பற்றியும் சிரத்தை கொள்ளத் தேவயில்லை " என்று மார்க்கண்டு சுவாமிகளுக்கு உபதேசித்தார்.

மார்க்கண்டு சுவாமிகளும் கூடுதலாக சிவத்தியானத்தில் இருந்தார். சில வேளைகளில் அவரின் தலையில் காகம், குருவி என்பன வந்திருக்கும். அப்படித் தன்னை மறந்த நிலையில் இருந்தார் சுவாமிகள். ஒருநாள் யோகர் சுவாமிகள், "தியானம் செய்தால் அதுவும் வேலை; பத்து நிமிடம் சும்மா இருக்கப் பழகு" என அருளி, ஏகாந்த மோன நிலையில் இருக்க வழிவகுத்தார்.

சோல்பரி பிரபுவின் மகன் இராம்ஸ போதத்தை (சந்த சுவாமியை ) சில காலம் மார்க்கண்டு சுவாமிகளுடன் தங்க வைத்து, அவருக்கு அருளுரைகள் வழங்குமாறு யோகர் சுவாமிகள் பணித்தார். சோல்பரி பிரபுவின் மகனும் மார்க்கண்டு சுவாமிகளிடம் ஒரு மகனைப்போல அன்பு செலுத்தி, எதுவித வசதிகளையும் எதிர்பாராது சாதனைகளில் ஈடுபட்டார்.

அமெரிக்கத் துறைவி சுப்பிரமணிய சுவாமி, ஜெர்மன் சுவாமி, அவுஸ்திரேலிய பன்றிக்குட்டி சுவாமிகள் உட்பட பல சமயத்தையும் சேர்ந்தவர்கள் மார்க்கண்டு சுவாமிகளிடம் அருளாசி பெற வந்தார்கள்.

யோக குருநாதர் சமாதி அடைந்த பின்னரே, அன்பர்களை தனக்கு முன்னால் கற்பூரம் கொழுத்தி வழிபட சுவாமி அனுமதித்தார். வழிபடும் அன்பர்களுக்கு அவரவர் தேவைக்கேற்ப உறுதி செய்யும் ஆறுதலையும் அளிக்கவல்ல திருமுறைப் பாடல்களையும் நற்சிந்தனைப் பாக்களையும் சொல்வதன்றி தன் வாக்காக எதையும் சொல்லமாட்டார்.

மார்க்கண்டு சுவாமிகள், தம்இறுதி நாள்களில், குளிப்பு முழுக்கு முதலியவற்றைக் கைவிட்டதோடு, உணவையும் வெகுவாகச் சுருக்கிக் கொண்டார். சுவாமிகள் தளர்ச்சியடைந்து காணப்பட்டதால், யோகு, பசுபதி போன்ற வைத்தியர்கள் மார்க்கண்டு சுவாமிகளைப் பார்வையிட வந்தபோது, சுவாமிகள் தனக்கு எந்தவித வருத்தமும் இல்லை என்று சொல்லிவிட்டார்.

ஆனால், சுவாமிகளின் உடம்புக்கு அந்திம காலம் நெருங்கிவிட்டது என்பதை அன்பர்கள் உணர்ந்தார்கள். ஆனால், சுவாமிகளோ 'சும்மாவிருந்து' இரத்தாசி வருடம் வைகாசி 16ஆம் நாள், செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கார்த்தகை நட்சத்திரத்தில் யோக குருநாதரின் திருவடிகளைப் பற்றினார்.

# நெல் உற்பத்தியை ஊக்குவிக்க ஜப்பான் அரசாங்கம் உதவி

## ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினூடாக (FAO) 4.6 மில். அமெ. டொலர் வழங்கும்



இலங்கையின் உலர் மற்றும் இடைவெப்ப வலயங்களில் அடையாளம் காணப்பட்டுள்ள மாவட்டங்களிலுள்ள சிறு நெல் விவசாயிகளின் உற்பத்தித் திறனை வலுவூட்டுவதற்கு 4,629,629 அமெரிக்க டொலரை ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினூடாக (FAO) ஜப்பான் அரசாங்கம் வழங்கிவருகிறது.

சிறிய அளவில் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் பிரதானமாக தமது சுய பயன்பாட்டுக்காக விளைச்சலைப் பயன்படுத்துவதோடு, அவர்களே பாதிக்கப்படக்கூடிய சமூகமாகவும் உள்ளனர். இரு காலங்களில் தொடர்ச்சியாக ஏற்பட்ட உரத் தட்டுப்பாடு காரணமாக அறுவடை வீழ்ச்சியடைந்தமையால், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கான தேவைப்பாடுகளை அடைந்து கொள்வதற்கு சில விவசாயிகள் எதிர்விளைவுடைய கையாளல் மூலோபாயங்களைக் (அடகு வைத்தல், கடனுக்கு வாங்குதல், சேமிப்பிலிருந்து மீளப் பணம் பெற வேண்டி ஏற்படுதல்) கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆட்பட்டனர்.

இந்த முன்னெடுப்பின் மூலமாக, உலர் மற்றும் இடை வலயங்களில் அடையாளம் காணப்பட்டுள்ள மாவட்டங்களில் காணப்படக்கூடிய ஓர் ஏக்கர் வரையான நிலப்பகுதியில் பயிர்செய்யும் சுமார் 2,50,000 சிறிய அளவில் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 50 கிலோ கிராம் யூரியா உரம் எதிர்வரவிருக்கும் சிறு போக மற்றும் பெரும் போக பயிர்ச் செய்கைக் காலத்துக்கென வழங்கப்படவுள்ளது. இவ் உர வகை இலவசமாக வழங்கப்படும் என்பதுடன், விவசாய அமைச்சு மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆதரவுடன் விநியோகிக்கப்படும். உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு உரத்தின் வினைத்திறனுடைய பயன்பாடு குறித்து விழிப்புணர்வூட்டல்களையும் சிறு நெல் விவசாயிகளுக்கு இச்செயற்றிட்டம் வழங்கும்.

"விவசாயத்தை ஊக்குவிப்பதுடன் மிகவும் பாதிப்புக்குள்ளான மாவட்டங்களில் பாதிக்கப்படக்கூடிய விவசாயிகள், மீனவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதற்கும், இலங்கையிலுள்ள உணவு மற்றும் விவசாய அமைப்பு முன்வந்துள்ளது**

"அந்நியச் செலாவணியில் நிலவும் தட்டுப்பாடு காரணமாக உரத்தைப் பெற்றுக்கொள்ள மேலதிக மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு ஜப்பானிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதை நாம் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். இவ் ஆதரவானது, சிறு விவசாயிகளுக்கான சிறந்த வாழ்வாதாரத்தையும், நாடு பூராகவும் உள்ள அனைத்துப் பிரஜைகளுக்குமான அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான நிலையான அணுகலை உறுதிப்படுத்தி, உணவு உற்பத்தியை நெருக்கடிக்கு முன்பிருந்த மட்டத்திற்கே மேம்படுத்தும் என நாம் எதிர்பார்க்கிறோம்" என இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிதேகி தெரிவித்தார்.

உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), அதன் பங்குதாரர்களுடன் இணைந்து, நகர்ப்புற அமைப்புகள் உள்ளடங்களாக, விவசாயத்தை ஊக்குவிப்பதுடன் மிகவும் பாதிப்புக்குள்ளான மாவட்டங்களில் பாதிக்கப்படக்கூடிய விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதற்கும், துரித உணவுப் பாதுகாப்புத் தேவைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் இலங்கையிலுள்ள உணவு மற்றும் விவசாய அமைப்பு முன்வந்துள்ளது.

முதல் காலாண்டில் கொமர்ஷல் வங்கி குழுமத்தின்


# இரண்டு ட்ரில்லியன்களை கடந்த வைப்புகள்

கொமர்ஷல் வங்கிக் குழுமத்தின் வைப்புத்தளம் இரண்டு ட்ரில்லியன் ரூபாய்களைத் கடந்துள்ளதாக, 2023 ஆம் ஆண்டுக்கான முதல் காலாண்டு நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது 2023ஆம் ஆண்டில் முதலாம் காலாண்டில் எட்டப்பட்டுள்ள ஒரு மைல்கல் அடைவாக உள்ளதாகவும், நிலையற்ற நாணய மாற்று விகிதங்களின் தாக்கங்கள், சந்தை வட்டி விகிதங்கள், பல்வேறு வர்த்தகப் பிரிவுகளின் பொருளாதார வீழ்ச்சியின் தாக்கம் என்பனவற்றின் நடுவே இந்த உயர் பெறுமதி எய்தப்பட்டுள்ளதாகவும் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் இணை நிறுவனங்கள் மற்றும் கிளை நிறுவனங்கள் என்பன 2023 மார்ச் 31இல் முடிவடைந்த காலாண்டில் குறிப்பிடத்தக்க செயற்பாட்டு அடைவுகளைப் பதிவு செய்துள்ளன.



பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன



சனத் மனதுங்க

இந்தப் பெறுபேறுகள் பற்றி கருத்து வெளியிட்ட கொமர்ஷல் வங்கியின் தலைவர் பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன, "எதிர்ப்பார்க்கப்பட்டது போல் எமது செயற்பாடுகளில் சவால்கள் பிரதிபலிக்கின்றன. வட்டி மற்றும் நாணய மாற்று விகிதங்களின் ஏற்ற இறக்கம், பலவீனமானதோர் பொருளாதாரம், குறைபாடுகள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான ஒதுக்கீடுகளின் அதிகரிப்பு என்பனவற்றின் விளைவால் ஏற்பட்ட சவால்களே இவை. திடமான முன்னணி வளர்ச்சிகளை நாம் பதிவு செய்துள்ள அதேவேளை, அவை எமது வங்கியியல் உரிமைகளையும் உறுதி செய்கின்றது. வித்தியாசமான காரணிகளை முகாமைத்துவம் செய்வதற்கான அணுகுமுறைகள் அதனால் செயற்பாடுகளில் ஏற்படுகின்ற தாக்கங்கள் என்பன இலாபத்தின் சரிவை தவிர்க்க முடியாததாக்குகின்றது" என்று கூறினார்.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க இது பற்றிக் கூறுகையில் "மூன்று மாதங்களுக்கான செயற்பாட்டு வருமானமாக 25 பில்லியன்களைப் பதிவு செய்வதென்பது தற்போது நிலவும் சூழலில் நிதி ஆண்டுக்கான ஒரு யதார்த்தமான ஆரம்பமாகக் கருத முடியும். நாம் எமது திரவ நிலையையும் சட்ட ரீதியாக வேண்டப்படும் அளவை விட கணிசமான அளவு அதிகமான மட்டத்தில் பேணி உள்ளோம். வங்கித் துறை எதிர்வரும் காலங்களில் எதிர்நோக்கவுள்ள இன்னும் சிக்கலான பல சவால்களுக்கு மத்தியில் இவை முக்கியமான குறிகாட்டிகளாகும்" என்றார்.

சென்னை

# முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்த உதயநிதி

மாற்றுத்திறனாளிகள் நலத்துறைக்கு ஐ.ஏ.எஸ் தரத்திலான அதிகாரி நியமிக்கப்பட்டமைக்கு, நன்றி தெரிவிக்கும் விதமாக அமைச்சர் உதயநிதி டுவிட்டரில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.


அதில் 'தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக ஐ.ஏ.எஸ். தரத்திலான அதிகாரியை மாற்றுத்திறனாளிகள் நல ஆணையாளராக நியமித்து, முதலமைச்சர் ஸ்டாலின் வரலாறு படைத்துள்ளார். மாற்றுத்திறனுடையோரின் உரிமைகள் வெல்லட்டும்' என்று பதிவிட்டுள்ளார்.



செங்கல்பட்டு



# வேட்டிக்குள் சென்ற பாம்பு



சுமார் 7 அடி நீளம் கொண்ட பாம்பை தோளில் சுமந்தவாறு நபர் ஒருவர் மதுபானசாலைக்குச் சென்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

செங்கல்பட்டு பழைய பஸ்நிலையம் அருகே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவரைப் பார்த்ததும் அங்கிருந்தவர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடியதாகவும், எனினும் அவர் அப்பாம்பை லாவகமாக பிடித்து சிறிது நேரம் அங்கிருந்தவர்களுக்கு வேடிக்கை காட்டியதாகவும், பின்னர் அதனை, மடித்துக் கட்டிய தனது வேட்டிக்குள் போட்டுக்கொண்டு அங்கிருந்து சென்றதாகவும் கூறப்படுகின்றது.

இந்தூர்

# திருமணத்தன்று விசம் குடித்த மணமக்கள்



திருமணத்தன்று மணமக்கள் இருவரும் விசம் அருந்திய சம்பவம் மத்தியபிரதேசத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய பிரதேச மாநிலம், இந்தூரிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நீண்ட காலமாக மணமகள் தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு மணமகனை வற்புறுத்தி வந்துள்ளார் எனவும், ஆனால் தன்னுடைய தொழில் காரணமாக திருமணத்திற்கு இரண்டு ஆண்டுகள் அவகாசம் தருமாறு மணமகன் கேட்டுள்ளார் எனவும், இதனால் ஆத்திரமடைந்த மணமகள் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்தே இருவருக்கும் கடந்த செவ்வாய்கிழமை திருமணம் நடைபெற நிச்சயிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மனவிரக்தியில் இருந்த மணமகன், திருமணத்தன்று விசம் குடித்துள்ளதோடு இது குறித்து மணமகளிடமும் தெரிவித்துள்ளார். இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த மணமகளும் விசம் குடித்துள்ளார்.

இந்நிலையில் இருவரும் உறவினர்களின் உதவியுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மணமகன் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் அறிவித்தனர்.

அதேநேரத்தில் மணமகள் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

புது டெல்லி



# ஜல்லிக்கட்டு விவகாரம்; உச்ச நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

"ஜல்லிக்கட்டு போட்டியை நடத்தத் தடையில்லை" என உச்சநீதிமன்றம் நேற்றைய தினம் தீர்ப்பளித்துள்ளது.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக பொதுமக்கள் போராட்டம் நடத்திவந்த நிலையில், தமிழக அரசு அவசர சட்டம் கொண்டு வந்து ஜல்லிக்கட்டு போட்டியை நடத்த வழிவகை செய்தது.


எனினும் ஜல்லிக்கட்டு போட்டிகளை அனுமதிக்கும் தமிழக அரசின் குறித்த அவசர சட்டத்தை இரத்து செய்யக் கோரி விலங்கு நல வாரியம், பீட்டா உள்ளிட்ட அமைப்புகள் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தன.

இந்நிலையில் அனைத்து தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட அரசியல் சாசன அமர்வு, மனுக்கள் மீதான தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் கடந்த ஆண்டு டிசெம்பர் 12ஆம்திகதி ஒத்தி வைத்தது.

இந்த நிலையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த வழக்கில், ஜல்லிக்கட்டு போட்டிகளை அனுமதிக்கும் தமிழ்நாடு அரசின் சட்டத்தை உச்சநீதிமன்றம் உறுதி செய்தது. அத்துடன் ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த அனுமதிக்கும் சட்டத்தை இயற்றுவதற்கும் தமிழ்நாடு அரசுக்கு உரிமை உள்ளது என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சீனா

# படகு கவிழ்ந்ததில் 39 பேர் மாயம்



இந்தியப் பெருங்கடலில் சீன மீன்பிடி படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 39 பேர் மாயமாகியுள்ளனர்.

இந்தியப் பெருங்கடல் மத்தியில் சீனாவின் மீன்பிடி படகு செவ்வாய்க்கிழமை (16) அதிகாலை 3 மணிக்கு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

அப்போது அந்தப் படகில் 17 சீனர்கள், 17 இந்தோனேசியர்கள், 5 பிலிப்பின்ஸ் நாட்டவர்கள் இருந்துள்ளனர். விபத்துக்குப் பிறகு அந்த 39 பேரும் மாயமாகினர்.

இந்நிலையில் அவர்களை மீட்கும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, ஜனாதிபதி ஷி ஜின்பிங் பிறப்பித்துள்ள ஆணையில், மாயமாகியுள்ளவர்களைத் தேடும் பணிகளில் சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளும் முழுவீச்சில் ஈடுபட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

சீனா

# பயன்படுத்தாத கணக்குகள் நீக்கம்

### கூகுள் அதிரடி

உலகம் முழுதும், ஒரு மில்லியனுக்கும் மேலான தரவு மையங்களைக் கொண்டிருப்பதாக நம்பப்படும் கூகுள், ஒரு நாளில் ஒரு பில்லியனுக்கும் மேலான தேடல்களைக் கையாள்வதாகவும், இருபத்துநான்கு பெட்டா பைட்டு அளவுள்ள தகவல்களைச் சேமிப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறைந்தது 2 வருடங்களாக பயன்படுத்தப்படாத கணக்குகளை நீக்கும் செயலை கூகுள் தொடங்கியுள்ளது.

மின்னஞ்சல், யூடியூப், டிரைவ் மற்றும் பிற கூகுள் கணக்குகளில் உள்ள புகைப்படங்கள் மற்றும் உள்ளடக்கங்கள் நீக்கப்படும் என்றும் இந்தப் பயன்படுத்தாத கணக்குகள் அனைத்தும் 2023ஆம் ஆண்டுக்குள் நீக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா

# குவாட் உச்சிமாநாடு இரத்து

ஜோ பைடனின் அவுஸ்திரேலிய பயணம் இரத்து செய்யப்பட்டதை அடுத்து, இந்தியா உட்பட 4 நாடுகள் பங்கேற்கும் குவாட் உச்சிமாநாடு இரத்தானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி பைடன், அவுஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பனீஸ், ஜப்பானின் புமியோ கிஷிடா ஆகியோர் மே 24ஆம் திகதியன்று அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள குவாட் உச்சி மாநாட்டில் பங்கேற்க இருந்தனர்.

இந்நிலையில், அமெரிக்காவில் நிலவும் கடன் நெருக்கடி பிரச்சினை தொடர்பாக முக்கிய ஆலோசனைகளை மேற்கொள்ள உள்ளதால், தனது அவுஸ்திரேலிய பயணத்தை ஜோ பைடன் இரத்து செய்துள்ளார்.

இதனையடுத்து, குவாட் கூட்டம் இரத்து செய்யப்படுவதாக, அவுஸ்திரேலிய பிரதமர் அல்பனீஸ் அறிவித்துள்ளார். எனினும், வரும் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை ஜப்பானில் நடைபெறும் ஜி7 தலைவர்களின் மாநாட்டில் 4 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்பார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

# சம்பியன்ஸ் லீக்: வெளியேற்றப்பட்ட நடப்புச் சம்பியன்கள்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில் இருந்து நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் வெளியேற்றப்பட்டுள்ளது.

தமது மைதானத்தில் நடைபெற்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியுடனான முதலாவது சுற்று அரையிறுதிப் போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சமன் செய்திருந்த ஸ்பானிய லா லிகா கழகமான மட்ரிட், அவ்வணியின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்று அரையிறுதிப் போட்டியில் 0-4 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்து, 1-5 என்ற மொத்த கோல் கணக்கிலேயே தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தது.



சிற்றி சார்பாக பெர்ணார்டோ சில்வா இரண்டு கோல்களையும், மனுவல் அகஞ்சி, ஜூலியன் அல்வரேஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



# பயேர்ண் மியூனிச்சிலே தொடர விரும்பும் மனே?

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்களவீரரான சாடியோ மனே, சக முன்களவீரரான லெரோய் சனேயுடனான மோதலுக்கு மத்தியிலும் அக்கழகத்திலேயே தொடர விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சிக்கு மனே செல்வார் எனக் கூறப்பட்டிருந்தது.

# ஐ.பி.எல்: பஞ்சாப்பை வென்ற டெல்லி



இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரில், தரம்சாலாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸுடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பஞ்சாப்

டெல்லி: 213/2 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: றைலி றொஸோ ஆ.இ 82 (37), பிறித்திவி ஷோ 54 (38), டேவிட் வோர்னர் 46 (31), பில் ஸோல்ட் ஆ.இ 26 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: சாம் கர்ரன் 2/36 [4], ராகுல் சஹர் 0/35 [4])


பஞ்சாப்: 198/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: லியாம் லிவிங்ஸ்டோன் 94 (48), அதர்வா டைடே 55 (42) ஓட்டங்கள். பந்துவீச்சு: கலீல் அஹ்மட் 1/20 [3], குல்டீப் யாதவ் 0/21 [3], அன்றிச் நொர்கியா 2/36 [4], அக்ஸர் பட்டேல் 1/27 [3])

போட்டியின் நாயகன்: றைலி றொஸோ

இந்நிலையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸை கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

### உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையால்

# கிழக்கில் பூப்பந்தாட்டப் பயிற்சிப் பட்டறை



வீ.ரி. சகாதேவராஜா

உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையால் கிழக்கு மாகாணத்துக்கான பூப்பந்தாட்ட பயிற்சிப் பட்டறையானது முதல்முறையாக அம்பாறை மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமின் பயிற்றுவிப்பாளராக உலகத் தமிழர் பூப்பந்தாட்ட பேரவையின் இலங்கைக்கான இணைப்பாளரும் பயிற்றுவிப்பாளருமான அன்ரனி ஜெயகாந்தன் கலந்துகொண்டார். இதில், அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த வீர, வீராங்கனைகள் கலந்து சிறப்பித்தனர்.

இப்பயிற்சி முகாமானது இப்பிரதேசத்திலுள்ள வீர, வீராங்கனைகளை ஊக்கப்படுத்தும் செயற்பாடாகவும் திறமைகளை ஊக்கப்படுத்தும் ஒரு பயிற்சி முகாமாகவும் அமைந்திருந்தது.

> **இவ்வாறான ஒரு பயிற்சி முகாமை எதிர்வரும் காலங்களிலும் தொடர்ச்சியாக ஏற்படுத்தி, எமது பிரதேசத்திலுள்ள வீரர்களை தேசிய ரீதியில் வெற்றி பெறச் செய்வதற்கு உறுதுணையாக நிற்க வேண்டுகோள்**

இப்பயிற்சி முகாமின்போது கனடா நாட்டின் எல்சன் பூப்பந்தாட்டக் கழகமானது வீரர்களுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்களை வழங்கி உதவியிருந்தார்கள். இக்கழகமானது வடக்கு, கிழக்கு வீரர்களுக்கு வருடந்தோறும் அவ்வாறான உதவிகளை வழங்கி வருவதும் இங்கே குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஒரு பயிற்சி முகாமை எதிர்வரும் காலங்களிலும் தொடர்ச்சியாக ஏற்படுத்தி எமது பிரதேசத்திலுள்ள வீரர்களை தேசிய ரீதியில் வெற்றி பெறச் செய்வதற்கு உறுதுணையாக உலகத் தமிழர் பூப்பந்தாட்ட பேரவை கைகோர்த்து நிற்க வேண்டுமென விளையாட்டு அதிகாரி பத்மநாதன் வசந்த் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### லோவர்கிரண்லி தமிழ் வித்தியாலயத்தில்

# கபடி, சதுரங்கம் ஆரம்பிக்கப்பட்டன

பி. கேதீஸ்

நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட லோவர்கிரண்லி தமிழ் வித்தியால மாணவர்களுக்கு யுனிசெப் வேலைத்திட்டத்தின் கீழ் கபடி, சதுரங்கம் ஆகியன ஆரம்பிக்கப்பட்டன.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வெள்ளிக்கிழமை, 19 மே 2023, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.